www.waytosuccess.org

# ஒப்படைப்பு

**வகுப்பு** :12 **பாடம்**:உயிரி- விலங்கியல்

## அலகு-

### 2. மனிதஇனப்பெருக்கம்

### பகுதி – அ

**I.ஒரு மதிப்பெண் வினா**

1. கருப்பையின்உட்சுவரில்கருக்கோளம்பதியும்நிகழ்வுஇவ்வாறுஅழைக்கப்படுகிறது

அ) கருவுறுதல் ஆ) உறுப்பாக்கம்

இ) கருபதிதல் ஈ) விந்துஉள்ளேற்றம்

2. விந்தகத்தினைமூடியுள்ளவெளிப்புறஉறை

அ) டியூனிகாஅல்புஜினியா ஆ) பெரிமெட்ரியம்

இ) நுண்நீட்சிகள் ஈ) விட்டலின்சவ்வு

3. பெண்பாலுறுப்புகளுக்குள்முதன்மையானது

அ) எண்டோமெட்ரியம் ஆ) சுமரி

இ) அண்டங்கள் ஈ) பால்சுரப்பிகள்

4. அண்டகத்தினை, இடுப்புச்சுவர்பகுதியுடனும், கருப்பையுடனும்இணைக்கும்தசைநார்

அ) ஃபெல்லோப்பியன்நாளம் ஆ) மீசோவேரியம்

இ) நுண்நீட்சிகள் ஈ) டியூனிகாஅல்புஜினியா

5. குழந்தைபிறப்பின்போதுவலுவானசுருக்கங்களைஏற்படுத்துவதில்முக்கியபங்குகொள்வது

அ) என்டோமெட்ரியம் ஆ) மையோமெட்ரியம்

இ) மீசோவேரியம் ஈ) டெல்டாயிடுதசைகள்

6. ஆண்களின்பல்போயுரித்ரல்சுரப்பிகளுக்குஒப்பான,
பெண்இனப்பெருக்கமண்டலத்தில்காணப்படும்சுரப்பி

அ) பால்சுரப்பிகள் ஆ) எண்ணெய்சுரப்பி

இ) பர்த்தோலின்சுரப்பி ஈ) இவைஎதுவுமில்லை

7. முதல்நிலைஅண்டசெல்கள்,
குன்றல்பகுப்பின்எந்தநிலையில்தற்காலிகமாகநிறுத்தப்படுகின்றன?

அ) குன்றல்பகுப்பு-I, புரோநிலை-I ஆ) குன்றல்பகுப்பு-II, புரோநிலை-I

இ) குன்றல்பகுப்பு-I, மெட்டாநிலை-I ஈ) குன்றல்பகுப்பு-II, மெட்டாநிலை-I

8. “ஆண்ட்ரோஜன்இணைவுப்புரத“
உற்பத்தியைஅதிகரிக்கச்செய்துஸ்பெர்மியோஜெனிசிஸ்நிகழ்ச்சிநடைபெறஉதவும்ஹார்மோன்

அ) LH ஆ) FSH

இ) டெஸ்டோஸ்டீரோன் ஈ) TSH

9. ஆண்ட்ரம்எனும்திரவம்நிரம்பியசெல்கள்

அ) மூன்றாம்நிலைநுண்பைசெல்கள் ஆ) விந்துசெல்

இ) முதல்நிலைநுண்பைசெல்கள் ஈ) செர்டோலிசெல்கள்

10. கருவுறுதல்சவ்வினைஉருவாக்குவது

அ) ஃபாலிகுலார்செல்கள் ஆ) அக்ரோசோம்

இ) கார்பஸ்லூட்டியம் ஈ) கார்டிகல்துகள்கள்

## பகுதி – ஆ

### IIகுறுவினா

1. இனச்செல்உருவாக்கம்என்றால்என்ன?
2. மறைவிந்தகம்என்றால்என்ன?
3. இன்ஹிபின்என்பதுஎன்ன?
4. ஆண்இனப்பெருக்கமண்டலத்தின்துணைசுரப்பிகள்யாவை?
5. விந்துதிரவத்தின்பகுதிப்பொருட்கள்யாவை?

## பகுதி – இ

### III. சிறுவினா

1. விதைப்பையானதுஒருவெப்பநெறிப்படுத்தியாகஎவ்வாறுசெயல்படுகிறது?
2. செமினல்பிளாஸ்மாவில்அடங்கியுள்ளபொருட்கள்யாவை?
3. அக்ரோசோம்வினைஎன்பதுயாது?

## பகுதி – ஈ

### IV. பெருவினா

1. ஆண்இனப்பெருக்கமண்டலத்தினைவிவரி.
2. பால்சுரப்பியினைவிவரி.
3. விந்துசெல்லின்அமைப்பைபடத்துடன்விவரி.
4. அண்டசெல்லின்அமைப்பைவிவரி.

## 3. இனப்பெருக்க நலன்

## பகுதி – அ

**I.ஒரு மதிப்பெண் வினா**

1. ஒரு கருதடை மாத்திரை அண்டசெல் வெளியீட்டை எவ்வாறு தடுக்கிறது.

அ) அண்ட நாளத்தில் அடைப்பு ஏற்படுத்துதல் மூலம்

ஆ) FSH மற்றும் LH ஹார்மோன்களை தூண்டுவதன் மூலம்

இ) FSH மற்றும் LH ஹார்மோன்களை சுரத்தலை தடுப்பதன் மூலம்

ஈ) அண்டசெல் விடுபட்டவுடன் அதனை உடனடியாக அழித்துவிடுவதன் மூலம்

2. வரிசை-I மற்றும் வரிசை-IIஐ பொருத்தி சரியான விடைத்தொகுப்பை தெரிவுசெய்யவும்

| வரிசை | | வரிசை | |
|---|---|---|---|
| A | தாமிரவெளிவிடு IUD | i | LNG-20 |
| B | ஹார்மோன் வெளிவிடு IUD | ii | லிப்பஸ் வளைய IUD |
| C | மருந்தில்லா IUD | iii | சாஹெலி |
| D | மாத்திரைகள் | iv | Mulitiload-375 |

அ) A(iv), B(ii), C(i), D (iii)
ஆ) A(iv), B(i), C(iiii), D (ii)

இ) A(i), B(iv), C(ii), D (iii)
ஈ) A(iv), B(i), C(ii), D (iii)

3. கீழ்வருவனவற்றுள் ஹார்மோன் கருத்தடை மாத்திரைகளின் செயல்கள பற்றிய தவறான கூற்று எது?

அ) அண்ட வெளிப்பாட்டை தடை செய்தல்

ஆ விந்து செல்லாக்கத்தை தடை செய்தல்

இ) கருப்பைவாய் கோழையின் தன்மை மாற்றத்தால் விந்து செல் நுழையும் பாதை மற்றும் விந்து செல் நகர்வதை பலவீனப்படுத்துகிறது

ஈ) கருப்பை உட்கோழைப்படலத்தில் ஏற்படும் மாற்றம் கருப்பதிவிற்கு எதிரான சூழலை ஏற்படுத்துகிறது.

4. உறுதிகூற்று (A): LNG20 என்பன சில ஹார்மோன் வெளியிடும் உள்கருப்பை சாதனங்கள் ஆகும். காரணம் (R): இது கருப்பை வாய் சுரக்கும் கோழைப்பொருளின் வழவழப்புத் தன்மையை உயர்த்தி விந்துசெல்கள் கருப்பை வாயினுள் நுழைவதை தடைசெய்கிறது.

அ) (A) சரியானது ஆனால் (R) தவறானது

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை.ஆனால் (R) என்பது (A) யின்சரியான விளக்கம்

இ) (A) தவறானது. ஆனால் (R) சரியானது

ஈ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை, ஆனால் (R) என்பது (A) யின் சரியான

விளக்கமில்லை

5. கீழ்வருவனவற்றுள் எந்த ஒன்று IVF சிகிச்சையின் படிநிலைகள் அல்ல.

அ) விந்தகம் தூண்டப்படுதல் | ஆ) அண்டகம் தூண்டப்படுதல்

இ) அண்டத்தை வெளியே எடுத்தல் | ஈ) கருவுறுதல் மற்றும் கரு வளர்ப்பு

6. இந்தியாவில் குடும்பநலத்திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1941 | ஆ) 1951

இ) 1961 | ஈ) 1971

7. கர்ப்பத்தை தள்ளிப்போட விரும்பும் பெண்களுக்கு இது சரியான தீர்வாகும்.

அ) வாய்வழி கருத்தடை மாத்திரைகள்

ஆ)உள் கருப்பை சாதனங்கள்

இ) திரைச்சவ்வுகள், கருப்பைவாய் மூடி மறைப்புத திரைகள்

ஈ) கருக்குழல் தடை

8. பாலியியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க உருவாக்கப்பட்டது.

அ) PCPNDT

ஆ) POCSO

இ) இனப்பெருக்க மற்றும் குழந்தைகள் நலபாதுகாப்பு RCH

ஈ) UNDPIS

9. தாய்சேய் இணைப்புத் திசுவில் குரோமோசோம் பிறழ்ச்சிக்கான ஆய்வு

அ) உடல் வெளிக்கருவுறுதல் | ஆ) GIFT

இ) ZIFT | ஈ) கோரியான் நுண் நீட்ச்சி ஆய்வு

10. சரியான கூற்று எது?

அ) உடல் வெளிகருவுறுதலுக்கு 10000 முதல் 100000 நகரும் திறனுள்ள விந்தணுக்கள் தேவைப்படும்

ஆ) விந்து செல்கள் அறுவை சிகிச்சை மூலம் உடல் வெளிக்கருவுறுதலுக்காக எடுக்கப்படும்.

இ) அண்டசெல்கள் சிறப்பு ஊடகத்தில் தயார் செய்யப்படும்

ஈ) HCG ஊசி உடல் வெளிக்கருவுறுதலில் தேவையில்லை

## பகுதி – ஆ

**IIகுறுவினா**

1. பெண் கருகொலை மற்றும் சிசுக்கொலை வேறுபடுத்துக.

2. மருந்தில்லா உட்கருப்பை சாதனங்கள் பற்றி கூறுக.

www.waytosuccess.org

3. GIFT, ZIFT வேறுபடுத்துக

4. சாஹெலி என்றால் என்ன?

5. மேயர் ரோகிடான்ஸ்கி நோய்க் குறைபாடு என்றால் என்ன?

6. கோரியான் நுண்நீட்சி மாதிரி ஆய்வை விவரி.

7. கரு கண்காணிப்புக் கருவியின் பயன் யாது?

8. இனப்பெருக்க துணைதொழில்நுட்பம் என்றால் என்ன?

## பகுதி – இ

### III. சிறுவினா

1. இந்தியாவில் ஆம்னியோசென்டோசிஸ்க்கு சட்டபூர்வமாக தடை விதித்திருப்பது ஏன்? மற்றும் அதன் சட்டபூர்வமான தடை?

2. இந்தியாவில் மக்கட்தொகையை கட்டுப்படுத்த எடுத்துள்ள நடவடிக்கைகளைக் கூறுக.

3. கருக்குழல் தடை என்றால் என்ன?

4. கரு உறைநிலை குளிரூட்டும் முறை என்றால் என்ன?

5. வாடகைத் தாய்மை என்றால் என்ன?

6. ஹார்மோன் வெளிவிடும் உள்கருப்பை சாதனங்கள் விவரி.

7. ஏஜீஸ்பெர்மியா என்றால் என்ன?

## பகுதி – ஈ

### IV. பெருவினா

1. பலவகையான மலட்டுத்தன்மைக்கு சோதனைக்குழாய் குழந்தை ஓர் தீர்வாக அமைகிறது. இந்த தொழில்நுட்பத்தை விளக்குக.

2. ART என்றால் என்ன? இதில் உள்ள இரண்டு தொழில்நுட்பத்தை விளக்குக.

3. குடும்பகட்டுப்பாடு என்றால் என்ன? அதற்கான கருத்தடை முறைகளை விவரி.

www.waytosuccess.org

அலகு-II

4. மரபுக்கடத்தல் கொள்கைகள் மற்றும் மாறுபாடுகள்

## பகுதி – அ

### I.ஒரு மதிப்பெண் வினா

1. ABO இரத்த வகைகளைக் கண்டறிந்தவர் யார்?

அ) டீகாஸ்டல்லோ ஆ) காரல் லேண்ட்ஸ் டெய்னர்

இ) வெய்னர் ஈ) பெர்னஸ்டின்

2. பொதுக் கொடையாளர் என அழைக்கப்படும் ரத்தவகை எது?

அ) AB ஆ) A

இ) B ஈ) O

3. XX-YYவகை பால் நிர்ணயம் எதில் காணப்படுகிறது?

அ) பட்டாம் பூச்சி ஆ) பறவைகள்

இ) கரப்பான் பூச்சி ஈ) மனிதன்

4. கூலியின் இரத்த சோகை என அழைக்கப்படும் நோய் எது?

அ) பினைல் கீடோநியூரியா ஆ) ஹீமோபிலியா

இ) தலசீமியா ஈ) டர்னர் சிண்ட்ரோம்

5. உறவினர் தேர்வு காணப்படும் உயிரினம் எது?

அ) தேனீக்கள் ஆ) வெட்டுக்கிளிகள்

இ) கரப்பான் பூச்சிகள் ஈ) அத்திப்பூச்சிகள்

6. Rh காரணிகளை எந்த உயிரினத்தின் இரத்தத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது?

அ) தவளை ஆ) நண்டு

இ) ரீசஸ் குரங்கு ஈ) முதலை

7. 21-டிரை சோமி எனப்படுவது எது?

அ) பட்டாவ் சிண்ட்ரோம் ஆ) டவுன் சிண்ட்ரோம்

இ) டர்னர் சிண்ட்ரோம் ஈ) கிளைன் ஃபெல்டர்

8. நிறமி குறைபாட்டு நோய் எந்த நொதியின் குறைபாட்டால் ஏற்படுகிறது?

அ) டைரோசினேஸ் ஆ) அமிலேஸ்

இ) பினைல் ஈ) பெப்டிடேஸ்

9. இணை ஓங்கு தன்மை இரத்த வகை எது?

அ) A ஆ) B

இ) AB ஈ) O

10. குரோமோசோம் தொகுப்பு வரைபடத்தில் குரோமோசோம்களை எத்தனை குழுக்களாக வகைப்படுத்தலாம்?

அ) 7 ஆ) 8

இ) 9 ஈ) 6

## பகுதி – ஆ

### IIகுறுவினா

1. சுரப்பாளர்கள் என்பவர்கள் யார்?
2. வெற்று அல்லீல் என அழைக்கப்படுவது எது?
3. வேறுபட்ட இனச்செல் பெண் உயிரிகளுக்கு எடுத்துக்காட்டு தருக?
4. வரையறை - பார் உறுப்புகள்.
5. பால் சார்ந்த மரபு கடத்தல் என்றால் என்ன?
6. குரோமோசோம் தொகுப்பு வரைபடம் என்றால் என்ன?
7. குடும்ப மரம் பற்றி எழுதுக.
8. மனிதனில் காணப்படும் உடல் குரோமோசோம்கள் சார்ந்த ஒழுங்கற்ற பன்மய நோய்கள் யாவ
9. இரத்த உறவு திருமணத்திற்கான மரபுக் குறியீடுகளையும், ஒற்றைக் கரு ஒத்த இரட்டையர்கள் மரபு குறியீடுகளையும் வரையவும்.
10. வளர்சிதை மாற்ற பிறவி குறைபாட்டு நோய்கள் இரண்டை எழுதுக?
11. வரையறு - இடியோ கிராம்,
12. சின்ரோம் என்றால் என்ன?
13. ஒழுங்கற்ற பன்மயம் (அல்லது) அன்யூபிளாய்டி - வரையறு.

## பகுதி – இ

### III. சிறுவினா

1. பல்கூட்டு அல்லீல்கள் என்றால் என்ன? எ.கா. தருக.
2. ஹோலாண்டிரிக் ஜீன் - வரையறு,
3. குரோமோசோம் தொகுப்பு வரைபடம் என்றால் என்ன? அதன் குரோமோசோமின் வகைகள் யாவை?
4. ஹண்டிங்டன் கோரியா என்றால் என்ன?
5. மெண்டலின் மரபுக் குறைபாடுகளை பட்டியலிடுக.
6. டர்னர் சிண்ட்ரோம் என்றால் என்ன? அதன் அறிகுறிகள் யாவை?
7. மனிதனில் காணப்படும் இரத்த வகைகள் மற்றும் அதன் ஆறு வகையான மரபணு அமைப்புகளை எழுதுக.
8. குறுக்கு மறுக்கு மரபுக் கடத்தலை பற்றி எழுதுக.
9. லையோன் கருதுகோள் பற்றி எழுதுக.
10. உறவினர் தேர்வு எவ்வாறு நடைபெறுகிறது?

பகுதி – ஈ

## IV. பெருவினா

1. குரோமோசோம் தொகுப்பு வரைபடத்தில் பயன்களை எழுதுக.
2. தேனீக்களின் பால் நிர்ணயம் நடைபெறும் முறையை விவரி.
3. மனிதனின் மரபியல் அடிப்படையில் ABO இரத்த வகைகளை விவரி.
4. வளர்கரு இரத்த சிவப்பணு சிதைவு நோய் (அல்லது) எரித்ரோ பிளாஸ்டோசிஸ் பீட்டாலிஸ் பற்றி எழுதுக.
5. XX-XY வகை பால் நிர்ணயம் பற்றி விளக்குக,

-----